பற்றியது. அதற்கான முழு விவரத்தையும் சொல்லியிருக்கிறேன். எடுத்து வருகின்ற முயற்சிகளையும் சொல்லியிருக்கிறேன். மீண்டும் சொல்ல வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

உத்தப்பநாயக்கனூர் அருகிலுள்ள மலட்டு ஓடையின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 202—திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதி உத்தப்ப நாயக்கனூர் அருகில் உள்ள மலட்டு ஓடை நீர்ப்பாசன அணைக் கட்டுத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ)மற்றும்(ஆ); மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதி உத்தப்பநாயக்கனூர் அருகில் மலட்டு ஓடையின் குறுக்கே ரூ. 22.71 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஏரி அமைக்கும் திட்டத்திற்கு அரசு நடப்பு ஆண்டு மே மாதம் ஒப்புதல் அளித்துள்ளது. வேலை விரைவில் துவங்கப்படும்.

பெரியாறு வைகை பாசனத் திட்டம்.

*வினா எண் 234—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார்—வைகை நீர்ப்பாசன புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்ட நீர்ப்பாசன வசதியின் அளவு என்ன?

(ஆ) இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

(இ) இந்த திட்டத்தின் மேம்பாட்டிற்கு குழு ஒன்று அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) 25,463 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாகப் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் கிராமங்கள் 302.

(இ) பெரியாறு—வைகை பாசனத் திட்டத்தை ஆய்வு செய்யும் பொருட்டும் கண்காணிக்கவும் அலுவலர் கொண்ட குழு ஏற்கனவே 1979-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பெரியாறு மேம்பாட்டுத் திட்ட வேலைகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, திட்ட சம்பந்தப்பட்ட குறைகளை நீக்க ஆலோசனைகள் வழங்குகிறது.

1983 பிப்ரவரி 11]

திரு. க. பாரமலை : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 25,463 ஏக்கர் நிலத்திற்கு புதிதாக பாசன வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். இந்த வைகை நீர்ப்பாசன ஆயக்கட்டுகளைப் பொறுத்தவரையில், இப்போது தண்ணீர் வரத்து குறைந்துவிட்ட காரணத்தால் ஏற்கனவே பாசனம் பெற்ற பகுதிகள் முழுமையாகப் பயன் பெற முடியவில்லை. இரண்டாவதாக இந்த பெரியாறு பாசனம் முலம் பல்வேறு புதிய விஸ்தரிப்புப் பணிகள் நடைபெறுகிற காரணத்தால் வைகையில் அதிகமான தண்ணீர் வரும்போது 'சர்பிளஸ் வாட்டர்' பெற்று பயன்பட்ட கிருதிமால் நதி பாசன பகுதிகளுக்கு இனிமேல் அந்தப் பயன் கிடைக்காமல் போய்விடும். ஆகவே வைகை அணைக்கட்டுக்குக் கீழே இருக்கிற பகுதியைப் பொறுத்தவரையில், பெரியாறு—வைகை என்று பிரித்துப் பார்க்காமல் ஒட்டு மொத்தமாக பெரியாறு—வைகை பாசனப் பகுதி ஆயக்கட்டுகள் என்று கணக்கில் எடுத்துக் கொண்டு, அவைகளை பாதிக்காமல் புதிய திட்டங்களைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது தெரிவித்திருக்கக்கூடிய கருத்தை அரசு ஏற்கனவே தெளிவாக பரிசீலனை செய்திருக்கிறது. வைகை நதி நீர் பாசனம் பெற்று வருகிற நிலம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற யோசனையை கூறியிருக்கிறார்கள், பொதுவாக நாம் புதுத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்கனவே பயன்பெறும் பகுதிகள் பாதிக்காமல் பார்த்து வருகிறோம். இங்கும் இந்த இரண்டு பிரிவு நிலங்களும் பாதிக்காமல் பார்த்து வருகிறோம். இருந்தாலும் தனி சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை ஏற்றுக்கொள்கிறேன். அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த பெரியாறு—வைகை நீர்ப்பாசனத்தைப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் அதிகமான கிராமங்கள் பயன்பெறும் என்று சொன்னார்கள். அந்த கிராமங்கள் எந்த எந்த வட்டாரத்தைச் சேர்ந்தவை? ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனை கிராமங்கள் பயன்பெறும்? ஏற்கெனவே இந்த புதுப்பிக்கும் திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் தண்ணீர் கொண்டு போகலாம் என்ற கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்து அல்லது யோசனை ஏதாவது இப்போது நடைமுறைக்கு வந்திருக்கிறதா அல்லது நடைமுறைக்கு வரும் சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

[1983 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, 302 கிராமங்கள் பயன்படும் என்று சொன்னேன். குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை, மேலூர் வட்டங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், சிவகங்கை, கிழக்கு இராமநாதபுரம் வட்டங்கள் ஆகிய வற்றைச் சேர்ந்த கிராமங்கள் இதிலே இடம்பெறுகின்றன. பெரிய பட்டியலாக இருப்பதால் எந்த எந்த கிராமங்கள் என்று பிரித்து சொல்ல முடியவில்லை.

மதுராந்தகம் ஏரி

*வினா எண் 235—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்புகள் உள்ளதா?

(ஆ) மதுராந்தகம் பெரிய ஏரியிலிருந்து தனியார்களால் பம்புசெட்டுகள், Oil Engine மூலம் நீர் எடுக்கப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில் அவைகளை அப்புறப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ): ஆம்.

(இ) ஆக்கிரமிப்புக்காரர்களை அகற்றுவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளின் உதவியுடன், அவர்களுக்கு நோட்டீசுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 10.10)

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சட்ட விரோதமாக ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள். அவர்கள் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் ஆயில் என்ஜினைக் கொண்டு விவசாயம் செய்து கொண்டு வருவதோடு, இறைக்கும் தண்ணீரைக் கூட மற்றவர்களுக்கு கட்டணம் வசூலித்துக் கொண்டு கொடுத்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இந்தச் சட்ட விரோதமான காரியத்தை தடுக்கும் வகையில் அந்த ஆயில் என்ஜினைக் கைப்பற்ற அரசு முன்வருமா? மேலும் அந்த இடங்களில் மரங்களை நட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளில ஆக்கிரமிப்பு செய்பவர்களை அகற்றி அந்த இடங்களுக்கு அருகாமையில், சமூக காடுகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மரங்களை நடுகிற பணிகளில் வனத்